# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்

## றொம்மன் வளாகம்

ஆவணி / புரட்டாதி மாதாந்தப் பாடத்திட்டம் 2023/ 2024

## வகுப்பு 11

அரையாண்டு கற்பித்தல் வாரங்கள் 15

பாடம் 1 **தமிழ் ஒரு செம்மொழி**

**கற்பித்தல் காலம்: 3 வாரங்கள்**

| | |
|---|---|
| அடைவு | தமிழ் ஒரு செம்மொழி என்பதை தெட்டத்தெளிவாக அறிந்து கொள்வதுடன் மொழியியல் அடிப்படையில் 11 தகுதிப்பாடுகள் உள்ளன என்பதனை அறிதல்.<br><br>இலக்கணம்: தமிழ் எழுத்துகள் பற்றி அறிந்து கொள்வர். எழுத்துகளின் வகைப்பாடு பற்றி அறிவர்: |
| துணைக்கருவிகள் | பற்றிய காட்சிப்படுத்தல்<br><br>இலக்கணம் - சொல்லட்டைகள், எழுத்து அட்டைகள்<br><br>காட்சிப்படுத்தல் |
| செயற்பாடு | காட்சிப்படுத்தல்<br><br>குழுச்செயற்பாடு<br><br>ஒப்படை |
| **வாரம் 1** | |
| 27.08.2023<br><br>(வாரம் 34) | **கலந்துரையாடுவோம்:** பாடசாலையின் முதல் நாள் அறிமுகத்துடன் வகுப்பை தொடங்குதல்.<br><br>இணைந்த செயற்பாடு<br><br>பாடநூலிலுள்ள காட்சியை மையப்படுத்திக் கதைத்தல்.<br><br>**பாடவிளக்கம்**<br><br>• பாடத்தலைப்பு சார்ந்து காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்.<br>• தமிழ்மொழியின் செம்மொழிப்பண்புகளை விளக்குதல்.<br>• **புதிய சொற்களை** எழுதுபலகையில் எழுதிக், கலந்துரையாடல்.<br>• காட்சிப்படுத்தல் மூலம் விளக்கமளித்தல்.<br>• ஆசிரியர் பாடத்தை வாசித்து சுருக்கமாக விளக்கம் கொடுத்தல். |

| | |
|---|---|
| | **குழுச் செயற்பாடு - இணைந்த செயற்பாடு**<br><br>வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிந்து, சரிபார்த்து எழுதுதல்.<br><br>**செயல்நூல்:** செயல் 1 ஆசிரியர் துணையுடன் எழுதுதல்.<br><br>• மாணவர் வாசித்தல்<br><br>**விளையாட்டு:** Kahoot விளையாடுதல் |
| வீட்டுவேலை | வாசிப்பு,<br><br>வினாக்களுக்கான விடை எழுதுதல். |
| **வாரம் 2** | **பாடம் 1 - தொடர்ச்சி** |
| 03.09.2023<br><br>(வாரம் 35) | **மீட்டல்:**<br>வினாக்கள் மூலம் பாட விளக்கத்தைத் தெரிந்து கொள்ளுதல்.<br><br>❖ தகவல் பெட்டகம் - நகரமும் காதலியும்<br>ஆசிரியர் தகவல் பெட்டகம் பற்றிய விளக்கத்தைக் கொடுத்தல்.<br><br>செயற்பாடு : ஆ. செம்மொழி சார்ந்த சொற்களைக் கண்டறிதல்.<br><br>செயல்: 2 – மாணவர்கள் சுயமாக செய்தல்:<br><br>பேசுதல் வாசித்தல்)<br><br>**குழுச் செயற்பாடு - இணைந்த செயற்பாடு**<br><br>செயல் 3: தமிழ் -வாழிடமொழி அகரமுதலி உருவாக்குவது பற்றி ஆசிரியர், மாணவர் கலந்துரையாடுவர். (பேசுதல்)<br><br>**செயல்நூல்: 4**<br><br>**இணைந்த செயற்பாடு**<br><br>(பேசுதல், எழுதுதல்) |

| | |
|---|---|
| வீட்டுவேலை | பாடம் 1 – கருத்தன்றி வாசித்தல |
| **வாரம் 3** | **பாடம் 1 - தொடர்ச்சி** |
| 10.09.2023<br>(வாரம் 36) | **மீட்டல்:**<br>வினாக்கள் மூலம் பாட விளக்கத்தைத் தெரிந்து கொள்ளுதல்.<br>**இலக்கணம்: தமிழ் எழுத்துகள்**<br>**கடந்த வகுப்பில் கற்றதை மீட்டல்**<br>செயல் 5:பேசுவோம்: தமிழ்மொழியின் சிறப்பு (பேசுதல்)<br>**கட்டுரைக்கு சட்டம் அமைத்தல். – அலகு 1**<br>**விளையாட்டு: தமிழில் உரையாடுவோம். – சொல்விளையாட்டு.** |
| வீட்டுவேலை | வாசித்தலும் கட்டுரை எழுதலும். – அலகு 1 |
| | |

பாடம் 2: **தமிழ் இலக்கிய வரலாறு**

**கற்பித்தல் காலம்: 3 வாரங்கள்**

| | |
|---|---|
| அடைவு | மாணவர்கள் ஓர் இனத்தின் இலக்கியப் போக்குகளை வரையறுப்பதில் அக்கால அரசுகளின் எழுச்சிகளும் வீழ்ச்சிகளும் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதை விளங்கிக் கொள்வர்.<br>நாயக்கர் காலத்தில் எழுந்த இலக்கிய நூல்களை அறிந்து கொள்வர்.<br>இலக்கணம்: சார்பெழுத்துகள் பற்றி மாணவர் அறிந்து கொள்வர். |
| துணைக்கருவிகள் | காட்சிப்படுத்தல்<br>இலக்கணம் - சொல்லட்டைகள், எழுத்து அட்டைகள் |

| | |
|---|---|
| செயற்பாடு | காட்சிப்படுத்தல்<br>குழுச்செயற்பாடு – விளையாட்டு<br>ஒப்படை |
| **வாரம் 37** | |
| 17.09.2023<br><br>திலீபனின் வாரம்<br>வகுப்பில் உரையாடுதல். | **கலந்துரையாடுவோம்:** இணைந்த செயற்பாடு<br>பாடநூலிலுள்ள காட்சியை மையப்படுத்திக் கதைத்தல். (உழைப்பாளிகள் சிலை)<br>**பாடவிளக்கம்**<br>● பாடத்தலைப்பு சார்ந்து காட்சிப்படுத்திக் கலந்துரையாடல். தமிழ் இலக்கிய வரலாற்றை படிப்படியாக கொண்டு செல்லுதல்.<br>அதன் பின்னர் பாடத் தலைப்புக்குச் செல்லுதல்.<br>● **புதிய சொற்களை** எழுதுபலகையில் எழுதிக், கலந்துரையாடல்.<br>● காட்சிப்படுத்தல் மூலம் விளக்கமளித்தல்.<br>● ஆசிரியர் பாடத்தை வாசித்து, சுருக்கமாக விளக்கம் கொடுத்தல். பின்னர் மாணவர்களால் உரத்து வாசித்தல்.<br>**இணைந்த செயற்பாடு**<br>வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிந்து, சரிபார்த்து எழுதுதல்.<br>● தகவல் பெட்டகம் : புலவரின் பெருமை<br>● காளமேகப் புலவர் - மாணவர்களிடம் கேட்டறிந்து கொள்ளுதல்.<br>● புலவர் பாடிய வசைக்கவியை சுவைப்பட எடுத்துக் கூறுதல்:<br>**விளையாட்டு:** Kahoot விளையாடுதல்.<br>அறிவாடல் போட்டிக்கு மாணவர்களைத் தயார்படுத்துதல். |
| வீட்டுவேலை | வாசிப்பு, - கருத்தூன்றி வாசிதல் |

| | |
|---|---|
| | வினாக்களுக்கான விடை எழுதுதல். |
| **வாரம் 38** | **பாடம் 2 தொடர்ச்சி** |
| 24.09.2023<br><br>திலீபனின் வாரம்<br><br>வகுப்பில் உரையாடுதல் | **மீட்டல்:**<br>வினாக்கள் மூலம் பாட விளக்கத்தைத் தெரிந்து கொள்ளுதல்.<br><br>இலக்கியப் பொழில் - புறநானூறு -242<br><br>செயற்பாடு : பாட்டை பிரித்து பொருள் விளங்கக் கூறுதல்.<br><br>ஊரே போற்றும் மாவீரனை புகழ்ந்து பாட இதைவிட பாடல் வரிகள் உள்ளதா? பாடல் வரிகள் ஊடாக எடுத்துக்காட்டல்.<br><br>(கேட்டல், பேசுதல், வாசித்தல்)<br><br>அறிவாடல் போட்டிக்கு மாணவர்களைத் தயார்படுத்துதல்.<br><br>இலக்கணம்: சார்பெழுத்துகளும் அதன் வகைகளையும் எடுத்துக்காட்டுடன் விளக்குதல்.<br><br>ஒலியளவில் ஏற்படும் மாற்றம்:<br><br>- மாத்திரையில் குறைந்து ஒலிப்பவை<br><br>- மாத்திரையில் கூடிஒலிப்பவை<br><br>வுரிவடிவத்தில் ஏற்படும் மாற்றம் - இவற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குதல்.<br><br>**விளையாட்டு:** Kahoot விளையாடுதல் |
| வீட்டுவேலை | பாடம் - 2 – வாசித்து குறிப்பெடுத்து வருதல்: |
| **வாரம் 39** | **பாடம் 2 - தொடர்ச்சி** |
| | **மீட்டல்:**<br>வினாக்கள் மூலம் பாட விளக்கத்தைத் தெரிந்து கொள்ளுதல்.<br><br>சென்ற வாரம் மாணவர் குறிப்பெடுத்தத்தை வகுப்பில் முன்வந்து கூறுதல்: |

| | |
|---|---|
| | ஆசிரியர் நாயக்கர்கால வரலாற்றை power point இல் காட்சிப்படுத்தி உரையாடுதல்.<br><br>**செயல்நூல்:** செயல் 1, செயல் 2 மாணவருடன் சேர்ந்து வகுப்பில் செய்தல்.<br><br>**குழுச் செயற்பாடு - இணைந்த செயற்பாடு**<br><br>செயல் 3 - மாணவர்கள் 25 சொற்கள் கொண்ட தமிழ் - வாழிடமொழி அகரமுதலி உருவாக்குதல்.<br><br>செயல்: 4 – பேசுவோம்!<br><br>(பேசுதல்) |
| வீட்டுவேலை | செயல் 5 – எழுதிமுடித்தல்: |